மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# சங்க இலக்கியத்தில் நட்புச் சார்ந்த பதிவுகள்

## Friendship Study In Tamil Literature

ஹேமாவதி குமரேசன்/ Hemavathi Kumaresan[1]
[1]M. Ed. Scholar, Sultan Idris Education University
Corresponding Email: hemakumaresan20@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க இலக்கியத்தில் நட்புச் சார்ந்த பதிவுகள் என்பதே ஆய்வுத் தலைப்பாகும். இவ்வாய்வு, சங்க இலக்கியங்களில் நட்புச் சார்ந்த பதிவுகளை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பொதுவாகவே, சங்க இலக்கியங்கள் மரபு அடிப்படையில் படைக்கப்பட்டிருக்கும். அவை, காதல், இறைமை, பெண்மை, வீரம் போன்ற பாடுபொருளையும் கொண்டிருக்கும். திருக்குறள், நற்றிணை, புறனானூறு, நறுந்தொகை, மூதுரை, பழமொழி நானூறு, பாரதியார் கவிதைகள் போன்ற இலக்கியங்களில் நட்பியல் முறைகள் ஆராயப்படவிருக்கின்றன. மேலும், சங்க இலக்கியப் பாடல்களில் எவ்வாறான நட்புச் சார்ந்த கருத்துகள் பாடப்பட்டுள்ளன என்பதையும் இந்த ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள், யாரை, எப்படி நட்புக் கொள்ள வேண்டும் என்ற செய்திகள் சங்க இலக்கியத்தின் துணைகொண்டும் இன்றைய நடப்புச் சூழலைக் கொண்டு மகிழ்ச்சிக்காக நட்பு, பயன் கருதும் நட்பு, அறம் சார்ந்த நட்பாக ஆய்வு அமைந்துள்ளது.
**கருச்சொற்கள்:** நட்பு, சங்க இலக்கியம், நட்பியல்

**Abstract**

This research paper focuses on friendship study in Tamil literature. This review aims to explore friendship-based accounts in the associational literature. The works of Tamil literature are generally composed on a traditional basis with the yapu system. They contain elements of love, lordship, femininity, and heroism. This study seeks to find and explore the friendship-based accounts in Tamil literature. Friendship are being explored in literature such as Thirukkural, Narinai, Purananooru, Narundogai, Mudurai, Pasamozhi Nanoru, Bharatiyar poems. Moreover, this study also mentions the kind of friendship-related concepts that are song in Tamil literature songs. Among them are friendship for pleasure, friendship for utilitarianism and friendship based on virtue.
**Keywords:** Friendship, Tamil Literature

## முன்னுரை

இலக்கியங்கள் வகைப்படுத்தியிருக்கும் உறவுகளில் நட்புச் சிறப்பிடம் பெறுகின்றது. தாய் - பிள்ளை, கணவன்- மனைவி என்ற உறவுகளுக்கு ஈடாகப் போற்றப்படுகின்ற உயர் உறவு நட்பாகும். நட்புக்காகத் திருக்குறள் நான்கு அதிகாரங்களை ஒதுக்கியிருக்கின்றது. "நெஞ்சத்து அகநக நட்பது நட்பு' என்றும், "அழிவின்கண் அல்லல் உழப்பதாம் நட்பு" என்றும், "இடுக்கண் களைவதாம் நட்பு" என்றும், "கொட்புன்றி ஒல்லும்வாய் ஊன்றும் நிலை' என்றும் நட்புப் பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார் வள்ளுவர். உறவுகளை ஒதுக்கும் சமண முனிவர்களால் எழுதப்பட்ட நாலடியாரால் கூட நட்பை விட்டுவிட முடியவில்லை. நட்பிற்காக நாலடியார் மூன்று அதிகாரங்களை வழங்கியிருக்கின்றது. இந்த அற இலக்கியங்கள் கூறும் நட்பிற்கு முன்னோடியாக அமைந்தவை சங்க இலக்கியங்களே. மன்னனுக்கும் மக்களுக்கும் நெருக்கமான உறவிருந்த அக்காலத்தில் பெரிதும் புலவர்களே மக்களின் பிரதிநிதிகளாக இருந்தனர். அரசருக்கு அறிவுரை வழங்குவோராயும், நல்லறிவு சான்ற தூதாகவும் இயங்கினர். இவ்வகையால் மன்னருக்கும் புலவர்க்கும் இருந்த உறவுகள் நெருக்கமடைந்து நல்நட்பாயின. சங்கப் புலவோர் பலர் தம் நட்பை இலக்கியங்களில் அழகுறப் பதிவு செய்துள்ளனர். இப்பதிவுகள் வாயிலாகச் சங்ககாலத்து நட்புணர்வை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆய்விலக்கிய மீள்நோக்கு

சங்க இலக்கியங்களைப் பற்றி ஆராயும்போதும் பலரும் ஆய்வு கட்டுரைகளை எழுதியுள்ளனர். 'அகவாழ்வில் தோழி' என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை ஒன்று ஆராயப்பட்டுள்ளது. சுவாத்தி(2013) தமது கட்டுரையில் சங்க இலக்கியங்களில் கூறப்பட்ட அக இலக்கியங்களில் தலைவியின் உணர்வுகளைப் பெற்றோரைவிட மற்றோரை விட மிகச் சிறப்பாகத் புரிந்து கொள்ளும் பாத்திரமாகத் தோழி விளங்குகிறாள். அக இலக்கியங்களில் தோழியின் சிறப்பிடமும் நட்பும் குறித்து இக்கட்டுரை விளக்குகிறது.

இதனைத் தொடர்ந்து, சில்லாழி(2015) அவர்கள் 'சங்க இலக்கிய ஆய்வுகளின் குறியீட்டுக் கோட்பாடுகள்' எனும் ஆய்வை எழுதியுள்ளார். இந்த ஆய்வுக்கட்டுரையில், சங்க இலக்கியப் பாடல்களில் இடம்பெற்ற சில கோட்பாடுகள் பற்றி விளக்கப்பட்டுள்ளது.

அடுத்து, 'அற இலக்கியம் நாற்பது உணர்த்தும் தனிமனித நட்பு நெறிகள்' எனும் தலைப்பில் சு.ஜெனிபர் (2016) ஆய்வு ஒன்றனை மேற்கொண்டுள்ளார். தனிமனித நட்பு நெறிகளை ஆராய்தலே இவ்வாய்வின் நோக்கமாக ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாய்வில் தொடர்ந்து, நட்பின் சிறப்புகளையும், நட்பைப் பற்றி அறிஞர்கள் கூறும் கருத்துகளையும் ஆய்வாளர் நன்கு விளக்கியுள்ளார். வள்ளுவர் கூறும் நட்பின் மறுகட்டமைதி "Reframing Valluvar's claim on Friendship" எனுந் தலைப்பில் கிங்ஸ்டன் பால் தம்புராஜ், கார்த்திகேஸ் பொன்னையன் (2015) ஆய்வாளர்கள் ஆய்வினை மேற்கொண்டுள்ளனர். இவ்வாய்வில் ஆய்வாளர்கள் திருக்குறளில் நட்பு மறுகட்டமைதி பற்றி ஆய்வு செய்துள்ளனர்.

இறுதியாக, பிரபாகரன்(2020) 'வள்ளுவர் பார்வையில் நட்பு' என்ற தலைப்பில் ஆய்வை மேற்கொண்டுள்ளார். இவ்வாய்வில், ஆய்வாளர் நல்ல நட்பின் இலக்கணமும் சிறப்பும் வள்ளுவர் கூறிய சான்றோடு ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார்.

**ஆய்வு அணுகுமுறை**

இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக்குத் தேவையான நூல்களும் ஆய்வுக் கட்டுரைகளும் சேகரிக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறை தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வுக்குத் திருக்குறள், இன்னா நாற்பது, நறுந்தொகை, நீதிநெறி விளக்கம், பழமொழி நானூறு, பாஞ்சாலி சபதம், பத்துப்பாட்டு, நாலடியார் போன்ற நூல்கள் பயன்படுத்தப்பட்டன. எனவே, தரவுகள் சேகரிக்கப்பட்டு முறையாக நிரல்படுத்தப்பட்டு இந்த ஆய்வுக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

**தரவுப் பகுப்பாய்வு**

சங்க இலக்கியத்தில் நட்பு என்பது மிகப் பெரிய திறனாய்வுகளின் ஒருவகையாகக் கருதப்படுகின்றது. சங்க இலக்கியத்தில் நட்புப் பதிவுகள் அதிக முக்கியமான தலைப்புகளுள் ஒன்று ஆகும். சங்க இலக்கியத்தில் நட்புப் பதிவுகள் அதிகமாகவே மரபு பாடல்களில் பதிக்கப்பட்டிருக்கின்றன. இவை மனித நட்பின் அடையாளங்களைக் குறிக்கின்றன. அவ்வகையில், சங்க இலக்கியப் படைப்புகளில் பல நட்புப் பதிவுகள் உள்ளடங்கியுள்ளது.

**திருக்குறள் - திருவள்ளுவர்**

திருக்குறள் என்பது ஒரு தொன்மையான தமிழ் மொழி அற இலக்கியமாகும். சங்க இலக்கிய வகைப்பாட்டில் பதினெண்கீழ்க்கணக்கு எனப்படும் பதினெட்டு நூல்களின் திரட்டில் இருக்கும் இந்நூல் குறள் வெண்பா என்னும் பாவகையினாலான 1,330 ஈரடிச் செய்யுள்களைக் கொண்டது. இத்திருக்குறளில் பிறரிடம் அன்பு செலுத்துவதுதான் மனித வாழ்க்கையின் நோக்கமும் பயனும் (குறள் - 73) என்கிறார் வள்ளுவர். மேலும், நாம் அன்புடையவராக இருந்தால், மற்றவர்களுக்கு நம்மோடு பழக வேண்டும் என்ற ஆர்வத்தை நம்முடைய அன்பு உண்டாக்கும். அந்த ஆர்வம் நட்பு என்னும் சிறப்பை, நாம் தேடிப் போகாமல் தானே நம்மை வந்தடையச் செய்யும் (குறள் -74). அத்தகைய அன்புதான் நட்புக்கு அடித்தளமாக அமைகிறது என்பது வள்ளுவரின் கருத்தாகும்.

> அன்போடு இயைந்த வழக்குஎன்ப ஆருயிர்க்கு
> என்போடு இயந்த தொடர்பு (குறள்-73)

> அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
> நண்பென்னும் நாடாச் சிறப்பு (குறள்-74)

அது மட்டுமல்லாமல், நல்ல நட்பு என்பது அன்பின் அடிப்படையில் நல்லொழுக்கம் உடையவர்களின் நட்பு. ஒரு நல்ல நட்பு எப்படி இருக்க வேண்டும் என்பதற்குத் திருவள்ளுவர் சில அருமையான உவமைகளைப் படைத்துள்ளார். நல்ல நட்பு என்பது நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே இருக்கும் தன்மையானது. படிக்கும்பொழுதெல்லாம் ஒரு நல்ல நூல் இனிமையும் நன்மையும் தருவதுபோல், பழகப்பழக, நல்ல நட்பு நண்பர்களுக்கு இனிமையும் நன்மையும் பயக்கும் (குறள்-783). நட்பு நல்லதாக இல்லாவிட்டால் அது நாளுக்குநாள் குறைந்து கொண்டே போய்க் கடைசியில் இல்லாமலே போய்விடும். அறிவுள்ளவர்களுடன் கொள்ளும் நட்பு பிறைநிலவாகத் தொடங்கி முழுநிலவாக வளரும், அறிவில்லாதவர்களுடன் கொள்ளும் நட்போ முழுமதிபோல் முளைத்துப் பின்னர்த் தேய்பிறையாகக் குறைந்து மறைந்து போகும் (குறள்-782).

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு (குறள் 783)

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு (குறள் 782)

**புறநானூறு – ஔவையார்**

ஆத்திசூடி வகுத்துத் தந்த ஔவையார், அதியமான் நெடுமானஞ்சி மன்னனின் அன்பிற்கு உரிய நட்பினராக விளங்கினார். தமிழ்நாட்டின் வடமேற்காக அமைந்திருந்த தகடூர் என்ற பகுதியை அதியமான் அஞ்சி என்ற குறுநில மன்னன் ஆண்டு வந்தான். அதேபோன்று தமிழ்நாட்டின் வடகிழக்கில் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு தொண்டைமான் இளந்திரையன் ஆட்சி செய்து வந்தான். அதியமானுடன் போரிட்டு வென்று அவன் மண்ணைக் கைப்பற்ற வேண்டும் என்பது தொண்டைமானின் பலநாள் கனவு. போருக்கான ஏற்பாடுகளையும் செய்ய ஆரம்பித்துவிட்டான்.

அதியமானுக்கும், தொண்டைமான் இளந்திரையனுக்கும் இடையே போர் ஏற்படும் சூழல் உருவானது. இதனை அறிந்த ஔவையார், இந்தப் போரைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று எண்ணினார். இதற்காக அதியமானின் தூதுவராகத் தொண்டைமான் இளந்திரையனிடம் சென்றார் ஔவையார்.

தூது வந்த ஔவையாரைத் தொண்டைமான் அழைத்துச் சென்று தனது படைக்கலக் கொட்டிலைக் காட்டினான். அங்கே ஆயுதங்கள் பளபளவென மின்னியபடி இருந்தன. அப்போது தொண்டைமான் அதிகச் செருக்கு மிகுந்து காணப்பட்டான். அந்தச் செருக்கினை அழிக்க நினைத்த ஔவையார்,

இவ்வே, பீலி அணிந்து மாலை சூட்டிக்
கண்திரள் நோன்காழ் திருத்தி செய் அணிந்து
கடியுடை வியன்நகர் அவ்வே, அவ்வே

பகைவர் குத்திக் கொடுநுதி சிதைந்து
கொல்துறைக் குற்றில்!'

என்ற பாடல் மூலம் அதியமானின் படைப்பலத்தை விளக்கினார். அதாவது, 'மன்னவனே! உனது அரண்மனையில் உள்ள படைக்கலன்கள் யாவும் மயில் வீலி அணியப்பெற்று, மாலை சூட்டப்பட்டு, நெய் பூசப்பட்டு அழகுற மிளிர்கின்றன. ஆனால், அதியமானின் படைக்கலத்தின் காட்சி இப்படி இல்லை. அவன் ஆயுதங்கள் எல்லாம் பகைவர்களின் ரத்தம் தோய்ந்து, அவர்களின் கிழிந்த சதைகள் ஒட்டி நிறம்மாறி, கூர் மங்கிக் கொல்லனிடத்தில் சரி செய்ய வைக்கப்பட்டுள்ளன' என்றார். இதன் மூலம், தொண்டைமானுக்கு அதியமானின் படைப்பலத்தையும், போரில் அவன் செய்த வீரத்தையும், அவன் பெற்ற அனுபவங்களையும் மறைமுகமாகத் தெரிவித்தார். இதனை உணர்ந்த தொண்டைமான் தனது போரிடும் எண்ணத்தை கைவிட்டார்.

வெற்றிவேற்கை, அதிவீரராம பாண்டியர்
நூறு ஆண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குள் பாசிபோல் வேர் கொள்ளாதே
ஒரு நாள் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க்கும்மே (33&34)

இப்பாடலின் மூலம், எவ்வளவு காலங்கள்தான் நாம் பழகினாலும் கீழ் மக்களின் தொடர்பு அல்லது நட்பானது நீரிலுள்ள பாசியைப்போல நிலைத்து நிற்காது. நல்லவர்களின் நட்பு இதற்கு நேர் எதிர். அவர்களுடன் நாம் ஒரு நாள் பழகினால்கூடப் போதும், வலிமையான பூமியைப் பிளந்துகொண்டு உள்ளே செல்லும் வேரைக் கொண்ட மரம் போல அந்த நட்பு உறுதியாகிவிடும். அதன்பிறகு அதனை யாராலும் அசைக்கமுடியாது. அதிவீரராம பாண்டியரின் வரிகளும் கொண்டுள்ளது.

**மூதுரை - ஔவையார்**

தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவுந் தீதே - தீயார்
குணங்க ளுரைப்பதுவுந் தீதே அவரோடு
இணங்கி யிருப்பதுவுந் தீது

தீயவர்களைக் காண்பதும், அவர்களுடைய பயனற்ற சொற்களைக் கேட்பதும், அவர்களுடைய தீய குணங்களைப் பற்றிப் பேசுவதும், அவரோடு கூடியிருத்தலும் தீமையே பயக்கும். அதனால் தீயறிவும், தீயொழுக்கமுமே ஏற்படும். இந்தப் பாடல் வரிகளில் ஔவையார் பயன் கருதிப் பழகுவாரிடத்தில் உள்ளன்பு ஒரு சிறிதும் இருக்காது. உதட்டில் தேனொழுகப் பேசிப் பயனுள்ள காலத்து நட்புக் கொண்டு, பயன் முடிந்ததும் கைவிடுவாரின் நட்பினைக் கொள்வதால் ஒரு பயனும் இல்லை. அத்தகையோர் தீய நட்பைக் கொள்வதை விட, இழத்தலே சாலச் சிறந்தது என்று சிறப்பாகக் கூறியுள்ளார்.

**தொல்காப்பியம் – தொல்காப்பியர்**

தலைவியின் அகவாழ்வில் தோழி பெற்றிருக்கும் உயர் பங்கு தலைவனின் காதல் வாழ்வில் தோழனுக்கு இருக்கவில்லை என்பது உண்மையே. தலைவனோடு தோழி பேசுவதற்கு உடன்பட்ட இலக்கிய மரபு தலைவியோடு தோழன் பேசுவதற்கு உடன்படவில்லை. காதலுற்ற பெண்கள் பிற ஆடவரை நோக்குதலைத் தலைவனின் நண்பனாக இருப்பினும் இலக்கியங்கள் தவிர்க்கவே முயன்றிருக்கின்றன. தோழன் தலைவியின் முன் எதிர்ப்பட்ட போதும் தலைவி அவனை வழிப்போக்கனாகவே கருதுவாள். ஏனெனில், அவளுக்குத் தலைவனின் தோழர்களைத் தெரியாது. தலைவியின் இருப்பிடம் அறிந்து கூறுவதுவும், அவள் வருகையை உணர்த்துவதுமே தோழனின் கடமைகளாகவிருந்தன.

> ‘தோழியிற் கூட்டம் போலப்பாங்கன்
> உரையாடி இடைநின்று கூட்டாமையின்’ (தொல். 1047)

என நச்சினார்க்கினியாரும்,

> “தன் வயிற்பாங்கன் அவள்வயிற் பாங்கு செய்யான்” (தொல். 1443)

எனப் பேராசிரியரும் தோழனின் கடமைகளை வரையறை செய்துள்ளனர். தொல்காப்பியத்தில் இன்னும் தலைவனும் தோழனும் பற்றிய இலக்கியப் பாக்கள் அதிகம் உள்ளன.

**நிறைவுரை**

மனிதன் மற்றவர்களோடு கூடி வாழும் இயல்பும் அன்பும் உடையவன். ஒருவன் தன் உறவினர்களோடும் மற்றவர்களோடும் அன்பாகப் பழகுவதைப் பார்ப்பவர்களுக்கு அவனோடு பழகவேண்டும் என்ற ஆர்வம் உண்டாகும். அந்த ஆர்வத்தால் அவர்களுக்கும் அவனுக்கும் இடையே நட்பு உண்டாகும். நட்பை, அறம் சார்ந்த நட்பு, பயன் கருத்தும் நட்பு, மகிழ்ச்சிக்கான நட்பு என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம். எவ்வளவு ஆராய்ந்தாலும், சில சமயங்களில், ஒருவர் நல்லவரா தீயவரா என்று கண்டுபிடிக்க முடியாது. சில காலம் பழகிய பின்னர்தான் ஒருவர் நல்லவரா இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். இந்த ஆய்வின் மூலம், சங்க இலக்கியங்களில் இவை போன்ற நட்புக்குறிய சான்றுகள் அதிகமாகவே உள்ளன.

## துணைநூற்பட்டியல்

Jennifer, S. (2016, March 16). Ara Ilakiyam Naarpathu Unartthum Tanimanitha Natpu Nerigal. Retrieved from https://www.geotamil.com/index.php/2021-02-11-18-03-56/3234-2016-03-16-00-29-15

Kingston Pal Thamburaj, & Karthiges Ponniah. (2015). Reframing Valluvar's claim on Friendship. Tamil Peraivu, 2(1), 7 - 13. Retrieved from https://tamilperaivu.um.edu.my/index.php/tamilperaivu/article/view/13824/8624